# முத்துவீரியம்

கழக வெளியீடு

21 JAN1975

# முத்துவீரியம்

ஆசிரியர்:
முத்துவீர உபாத்தியாயர்

TNSDA
04020

கழக வெளியீடு

# முத்துவீரியம்

பதிப்பாசிரியர்:

பண்டித வித்துவான், சைவப்புலவர்,
சித்தாந்த நன்மணி

கு சுந்தரமூர்த்தி, எம் ஏ,

கழக வெளியீடு : கசசுங

திரிசிரபுரம் உறையூர் வித்துவான்
முத்துவீர உபாத்தியாயர்

இயற்றிய

# முத்துவீரியம்

[ஐந்திலக்கணங்களும் அடங்கியுள்ளன]

(திருநெல்வேலி திருப்பாற்கடலுதன் கவிராயர் உரையுடன்)




பதிப்பாசிரியர் :
பண்டித வித்துவான், சைவப்புலவர்
சித்தாந்த நன்மணி
கு சுந்தரமூர்த்தி, எம் ஏ, அவர்கள்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை-1.
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1972

குப்புசாமி முதலியார் சுந்தரமூர்த்தி (1930)

© 1972

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 (Kazhakam) November 1972




P31, JxM30,1
N72

L94.811
தூண்

# MUTHUVEERIYAM

(Eaztthu, Sol, Porul, Yappu & Ani)

Appar Achakam, Madras-1. (1/-)

# பதிப்புரை

செந்தமிழ் மொழியின் சீர்மைகள் பலவற்றுள்ளும் முதன்மையாகக் குறிக்கத் தக்கது அதன் இலக்கண வரம்பின் ஏற்றமே பென்பது அனைவரும் ஒப்பமுடிந்தவோர் உண்மையாகும். அவ்விலக்கணந்தானும் உலகிடை வழங்கும் ஏனைய மொழிகளுள் எம் மொழியிலும் பயிலப் பெறுத பொருளிலக்கணத்தொடு பொருந்தி எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னுமாற்றால் அமைந்துள்ள திறம் தமிழ் மொழியின் தன்னேரில்லாத் தனித் திறனுகும்.

ஐந்திலக்கணங்களும் ஒருங்கமையப்பெற்ற தொன்னூல்களுள் இன்ஞான்று நமக்குக் கிடைத்திருப்பது தொல்காப்பிய மொன்றுமே யாகும். இத் தொல்காப்பியத்துள், எழுத்துச் சொற்பொருள் என்னும் மூன்றதிகாரங்களில் ஐந்திலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. யாப்பும் அணியும் பொருளில் அடக்கிக் கூறப்பட்டுள்ளன. எனவே, பிற்காலத்தில் யாப்புக்கும் அணிக்கும் தனித்தனி நூல்கள் சிலரால் இயற்றப்படலாயின. ஈதன்றித் தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ள இலக்கணத்துறைகள் ஐந்தும் நுண்மாண் நுழைபுல முடையார்க்கே தெள்ளிதின் விளங்குவனவாகவும் ஏனையோர்க்கு எளிதில் விளங்காதனவாகவும் உள்ளன. எனவே, அறிஞர் சிலர் தொல்காப்பியத்திற்கு வழி நூலாக ஐந்திலக்கண முழு நூல் இயற்றலாயினர். இவ்வகையில் தோன்றிய நூல்கள் முறையே, வீரசோழியம், தமிழ்நெறி விளக்கம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல், முத்துவீரியம் என்பனவாகும். முத்துவீரியத்திற்குப் பின்னர்த் தோன்றிய நூல்களும் சிலவுள.

இந் நூல்களுள் 'தமிழ்நெறி விளக்கம்' என்பது முழுமையாகக் கிடைத்திலது. நன்னூல் கிடைத்துள்ளதில் எழுத்தும் சொல்லும் இடம் பெற்றுள்ளனவன்றி ஏனைய மூன்றும் இடம் பெற்றில. எஞ்சிய ஐந்திலக்கண முழுநூல்களுள் வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் என்னும் மூன்றும் முத்துவீரியத்திற்கு முற்பட்டனவாகும். இந் நூல்களிருப்பவும் 'முத்துவீரியம்' இயற்றப்பட்டதற்குக் காரணம் காலப்போக்கில் இலக்கியங்களில் தோன்றிய இலக்கண விகற்பங்கள் சிலவற்றை இயம்ப

வேண்டு மென்னும் ஆர்வமும், இலக்கண விதிகள் சிலவற்றிற்கு மேலும் விளக்கந் தரல் இன்றியமையாதது என்னும் உணர்ச்சியின் தூண்டுதலுமே யாகும்.

இவ்வாற்றுன் கி. பி. 19 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த **உறையூர் முத்துவீரப்ப உபாத்தியாயர் என்பவரால் இயற்றப்பட்ட** நூலே **முத்துவீரியம்** ஆகும். தொல்காப்பியரால் இயற்றப்பட்ட இலக்கணம் 'தொல்காப்பியம்' என வழங்கப்பெறுவதுபோல் முத்துவீரப்பரால் இயற்றப்பட்ட நூல் முத்துவீரியம் எனப்பெறுகின்றது.

தாம் இயற்றிய நூலின் இன்றியமையாமை மக்களுக்குப் புலப்படும் வகையில், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணத்துறை ஐந்தனுள்ளும் புதுமைக் கருத்துக்கள் சிலவற்றைப் பொருத்தமுற இந்நூலாசிரியர் புகன்றுள்ள திறம் போற்றற்குரிய தொன்றாகும். தொல்காப்பியத்தின் வழி நூலாகத் தோன்றிய அனைத்திலக்கண நூல்களும் தொல்காப்பிய உரையாசிரியர்கள் பலருடைய கருத்துக்களைத் தழுவியும், மாறுபட்டும் அமைந்தனவாகும். அவ்வகையில் இம் முத்துவீரியமும் தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றிற்கு உரை விளக்கம் போன்றமைந்துள்ளது. நன்னூலும் அங்ஙனமமைந்ததொரு நூலேயாகும். பலவிடங்களில் நன்னூலார் கருத்துக்களை முத்துவீரிய நூலாசிரியர் ஏற்றுப் போற்றியிருப்பது நன்னூலின் பெருமையை விளக்குவதாகும்.

சொற்பொருட் சுவை நலந்துய்த்து மகிழும் விழுப்பண்பாளர் இதனுற் பயன் யாதெனும் வினவை யெழுப்பாமல் சுவையே பயனாகக் கருதியமைவர்.

> "நுண்ணுணர்வி னுரொடு கூடி நுகர்வுடைமை
> விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்"

என்பது நூல்களுக்கும் பொருந்துவதாகும். இத்தகு தொன்னூல்களுட் சில போற்றுவாரின்மையால் இறந்தொழிந்தன வெனுங் குறிப்பினைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரையிற் காணுங்கால் தமிழார்வலர் நெஞ்சந்துணுக்குறுதல் இயல்பாகும். எனவே, இது போழ்து எஞ்சியுள்ள தொன்னூல்களுட் சில இறந்தொழியாவண்ணம் அவற்றைப் பேணுதல் வேண்டு மென்னும் அவாவினுல் உந்தப்பெற்று இதன் முனைனர், **வீரசோழியம்** என்னும் நூலைக் கழக வாயிலாக வெளியிட்டோம். **இலக்கண விளக்கம்** என்னும் நூல் வெளிவருந் தறுவாயிலுள்ளது. **முத்துவீரியம்** இப்பொழுது வெளிவருகின்றது.

21 JAN1975



இம் முத்துவீரிய நூலுக்கு உரையாசிரியராய் அமைந்தவர் திருநெல்வேலி திருப்பாற் கடலுதித்த கவிராயர் என்பார். இவர் தம்முரை பண்டை இலக்கண நூலுரையாசிரியர்களாகிய இளம் பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியவர்களுரையை ஒருவாறொத்திருப்பினும் பொழிப்புரையாகச் சுருக்கமாக அமைந்துள்ளது. முன்னோர் உரைகளுக்கெல்லாம் விளக்கக் குறிப்புத் தருவது போன்றே இவ்வுரைக்கும் விளக்கக் குறிப்புத் தருதல் நன்றுமென்று கருதினேம்.

எம் கழக வாயிலாக வெளிவந்துள்ள தொல்காப்பியச் சொல்லதிகாரம் இளம்பூரணருரை, கல்லாடருரை, நச்சினார்க் கினியருரை, தெய்வச்சிலையாருரை யாகியவற்றிற்குத் திருப்பனந் தாள் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் பண்டித வித்துவான் சைவப் புலவர் சித்தாந்த நன்மணி திரு. கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., அவர்கள் விளக்கக் குறிப்புரை எழுதியுதவி யுள்ளார்கள். அவ் விளக்கக் குறிப்புரைகள் புலவர் பெருமக்களின் பாராட்டைப் பெற் றுள்ளன. எனவே, இம்முத்துவீரிய நூலுக்கும் விளக்கக் குறிப்புரை வரைந்துதவுமாறு அவர்களேவேண்டினேம். அவர் களும் இசைந்து விளக்கக் குறிப்புரையுடன் மேற்கோட் செய்யுள் களில் பலவற்றிற்கு இடக் குறிப்பும் தந்துதவியுள்ளார்கள்.

மேலும், அவர்கள் இந்நூலுக்கு அரியதோர் ஆராய்ச்சி முன்னுரையும் வரைந்து அணி செய்துள்ளார்கள். அவ்வாராய்ச்சி யுரையின்கண் இம்முத்துவீரியத்தின் சிறப்பியல்புகளைத் தெளிவுற விளக்கியுள்ளார்கள். அல்லாமலும் அவ்வாராய்ச்சியுரை ஐந் திலக்கண நூல்கள் பற்றிய ஒரு திறனாய்வுக் கட்டுரை போன்று சுவைபட அமைந்துள்ள திறம் போற்றுதற்குரியதாகும்.

ஐந்திலக்கண நூல்கள் உள்ளன பிறவற்றிற்கும் இம் முத்து வீரியத்திற்கு மிடையே யமைந்த இயைபு வேறுபாடுகளை அடைவே எழுத்து முதல் அணியீறாக வுள்ள அதிகாரங்கள் ஐந்தினின்றும் எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்கியுள்ள முறை இவர் தம் ஆழ்ந்தகன்ற கல்விப் பெருமைக்குச் சான்றாக அமைந் துள்ளது.

சங்க காலத்திற்குப் பிறகு புறப்பொருள் நூல்கள் படிப் படியே சுருங்கி, அகப்பொருள் நூல்களே பல்கிப் பெருகலாயின மைக்குக் காரணங் காட்டுவாராய்,

"சங்ககால வாழ்வியலில் காட்டையும் தன்னையும் காத்துக் கொள்ளும் பொறுப்புத் தனிமனிதன் ஒவ்வொரு

வன் உள்ளத்திலும் வேரூன்றி வளர்ந்திருந்தது. அத்தகைய உணர்வு தேவையாயும் இருந்தது.

'வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'

என்பன போன்ற பாடல்கள் எழுந்தன.

காலப் போக்கில் நாட்டைக் காக்கும் பொறுப்பு அவ்வக் காலத்தில் காவற்சாகாடுகைக்கும் அரசற்கே உரியதாயது. காவலனும் அவனுக்கிருக்கும் படைகளுமே அதனைச் செய்யும் பொறுப்பை ஏற்றனர். ஆதலால்தான் போர்முறை பற்றிய இலக்கணங்களும் நெகிழலாயின''

எனக் குறித்துள்ள கருத்து இவர்தம் சிந்தனை யாழத்தைத் தெளிவுற விளக்குவதாகும்.

இனி, இத்தகு நூல்கள் தமிழ் கற்பவர்கள் அனைவராலும் விரும்பிப் பெற்றுக் கற்கப்படமாட்டா என்பதை நன்கறிவோம். எனவே, புலவர் தேர்விற்கு இது பாடமாக அமையப் பெறுதல் வேண்டு மென்னும் விழைவு ஒருபாலுடையேம். எனினும், அந் நோக்கோடு நாம் இதனை வெளியிட முன்வரவில்லை. ஊதிய நோக்கம் பெரிதின்றிப் பண்டைய நூல்களைப் பேணிக் காத்தல் வேண்டு மென்னும் பெருநோக்க மொன்றே குறிக்கொண்டு இதன் முன்னர்ச் சில நூல்களை வெளியிட்டிருத்தல் போன்றே இந்நூலை யும் வெளியிட்டுள்ளோம்

ஆயினும், தமிழைப் போற்றுதல் தங்கள் தலையாய பணி களுள் முதன்மையானதாகக் கொண்டு கோலோச்சி வரும் தமிழக அரசினர் இத்தகு பணிகளுக்கு இயன்ற வகையில் பொருளுதவி புரிதல் வேண்டும். நூலகப் பொறுப்பாளர்கள், தமிழார்வலர் களில் பொருள்வளம் வாய்க்கப்பெற்றவர் ஆகியோர் இந்நற்பணிக்கு உறுதுணையாக நிற்கவும் வேண்டும்.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் அறிவுரைக் கிணங்கத் தமிழின் உயர்வே கருதித் தொண்டாற்றும் எம்முயற் சிக்குத் துணை புரியுமாறு, இறைவன் திருவருளை வழுத்து கின்றோம்.

இதன் முதற் பதிப்பை 1889ஆம் ஆண்டில் பிழையின்றி அழகியதாக சென்னை அல்பீனியன் அச்சகத்தில் அச்சிட்டு வெளி யிட்ட திரு பழனியாண்டி அவர்கட்கும், அதற்கு நல்லுரை